# பத்தொன்பதாவது தமிழ்ப் பாடத்திட்டக்குழுக் கூட்டம்

2021 – 2022 ஆம் கல்வியாண்டுக்கானத் தமிழ்ப் பாடத்திட்டக்குழுக் கூட்டம் 03.05.2021 அன்று காலை 10.00 மணிக்கு இணைய வழியில் நடைபெற்றது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | கையொப்பம் |
|---|---|---|
| 1 | முனைவர் மு. புவனேஸ்வரி<br>பல்கலைக்கழகத் துணைவேந்தர் நியமன உறுப்பினர்<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>அரசு கலைக் கல்லூரி<br>கோயம்புத்தூர் -641 018. | 3/5/21 |
| 2 | முனைவர் இரா. பரிமளம்<br>துறைவல்லுநர்<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் -641 0 | 03.05.21. |
| 3 | முனைவர் இ. சேனாவரையன்<br>துறைவல்லுநர்<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>அரசு கலைக் கல்லூரி<br>கோயம்புத்தூர் -641 018. | |
| 4 | திருமதி. ஏஞ்சலின் ஜெபா<br>மேனாள் மாணவர் சார்பு உறுப்பினர்<br>இடைநிலை ஆசிரியர்<br>ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி<br>காளப்பட்டி, கோயம்புத்தூர் | |
| 5 | முனைவர் க. முருகேசன்<br>பாடத்திட்டக்குழுத் தலைவர்<br>தமிழ்த்துறைத்தலைவர் மற்றும் தேர்வாணையர்<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | 3/5/2 |
| 6 | முனைவர் இரா. மணிமேகலை<br>பாடத்திட்டக்குழு உறுப்பினர்<br>உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர் (பொறுப்பு), தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 029. | |

| | | |
|---|---|---|
| 7 | முனைவர் கு. முத்துக்குமார்<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | |
| 8 | முனைவர் மு. ருக்மணி<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | M. Rukmani |
| 9 | முனைவர் சு. சதீஷ்குமார்<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | |
| 10 | முனைவர் சு. அரவிந்த்<br>தமிழ்த்துறைத்தலைவர் (சுயநிதிப்பிரிவு)<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | 3/5/2021 |
| 11 | முனைவர் ஆ. சரவணன்<br>இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | |
| 12 | முனைவர் ச. அரிச்சந்திரன்<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | 03/04/2021 |
| 13 | முனைவர் த. பிரியா<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | |
| 14 | முனைவர் ஜெ. நிஷாந்தினி<br>இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | |
| 15 | முனைவர் மு. சதீஸ்குமார்<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் -29. | |

| | | |
|---|---|---|
| 16 | முனைவர் பு. பிரபுராம்<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | |
| 17 | முனைவர் மு. இராதா<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641 029. | |
| 18 | முனைவர் ஜி. சுஜாதாபாய்<br>மலையாள இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்<br>மொழியியல் துறை<br>சி.எம்.எஸ். கல்லூரி, கோயம்புத்தூர் - 641 | |
| 19 | திருமதி லதா வைலட்<br>பிரெஞ்சு பட்டதாரி ஆசிரியை<br>அவிலா கான்வெண்ட் மேனிலைப் பள்ளி<br>கோயம்புத்தூர். | |
| 20 | முனைவர் ஆர். ரமேஷ்குமார்<br>பேராசிரியர் மற்றும் தலைவர்,இந்தி துறை<br>இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர். | |
| 21 | திரு. கே. ஆர். கோபிநாத்<br>தலைவர், மாநில அலுவலகம்<br>சமஸ்கிருத பாதி டிரஸ்ட், கோயம்புத்தூர் -12. | |
| 22 | திருமதி ஜெ. இந்துமதி<br>இயக்குநர், பாரத கலா மந்திர்<br>கோயம்புத்தூர் - 641 036. | |
| | மாணவ உறுப்பினர்கள் | |
| 23 | கே.எம். மோகன் பிரசாத் (191ZO008)<br>இளம் அறிவியல் விலங்கியல் இரண்டாமாண்டு<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் -641 029. | |
| 24 | கே. சுஜானா (191PH002)<br>இளம் அறிவியல் இயற்பியல் இரண்டாமாண்டு<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் -641 029. | |

2021 – 2022 ஆம் கல்வியாண்டு முதல் சேரும் இரண்டாண்டுகள் தமிழ் பயிலும் மாணாக்கர்களுக்குரிய பகுதி I தமிழ் தாளில் நான்கு பருவங்களில் அலகு ஒன்றில் இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதிகள் மட்டும் முழுமையாக மாற்றம் செய்யப்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டு, மாற்றப்பட்ட செய்யுள் பகுதிகள் பாடத்திட்டக்குழுவின் முன் எடுத்துரைக்கப்பட்டது.

2021 – 2022 ஆம் கல்வியாண்டு முதல் சேரும் ஓராண்டு மட்டும் தமிழ் பயிலும் மாணாக்கர்களுக்குரிய பகுதி I தமிழ் தாளில் இரண்டு பருவங்களில் அலகு ஒன்றில் இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதிகள் மட்டும் முழுமையாக மாற்றம் செய்யப்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டு, மாற்றப்பட்ட செய்யுள் பகுதிகள் பாடத்திட்டக்குழுவின் முன் எடுத்துரைக்கப்பட்டது.

2021 – 2022 ஆம் கல்வியாண்டு முதல் சேரும் மாணாக்கர்களில் பகுதி IV சிறப்புத்தமிழ் தாளில் இரண்டு பருவங்களில் அலகு ஒன்றில் இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதிகள் மட்டும் முழுமையாக மாற்றம் செய்யப்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டு, மாற்றப்பட்ட செய்யுள் பகுதிகள் பாடத்திட்டக்குழுவின் முன் எடுத்துரைக்கப்பட்டது.

இரண்டாண்டுகள் தமிழ் பயில்வோர், ஓராண்டு மட்டும் தமிழ் பயில்வோர், சிறப்புத் தமிழ் பயில்வோர் ஆகியோருக்கான பகுதி I தமிழ் மற்றும் பகுதி IV பாடத்திட்டத்தில் ஏனைய அலகுகளில் எவ்வித மாற்றமுமின்றி 2021 – 2022 ஆம் கல்வியாண்டில் தொடர்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

2021 – 2022 ஆம் கல்வியாண்டு முதல் சேரும் மாணாக்கர்களில் பகுதி IV அடிப்படைத்தமிழ்ப் பாடத்திட்டத்தில் எவ்வித மாற்றமுமின்றி 2021 – 2022 ஆம் கல்வியாண்டில் தொடர்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

பொதுப்பாடத்திட்டக் குழுவின் கீழ் இதுவரையில் இருந்த மலையாளம், இந்தி, பிரெஞ்சு ஆகிய பகுதி I பாடங்களைத் தமிழ்ப் பாடத்திட்டக்குழுவில் இணைத்து ஒப்புதல் அளிக்கலாம் என்ற பாடத்திட்ட மேம்பாட்டுக் குழுவின் (Curriculum Development Cell) பரிந்துரையின்படி 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் சேரும் மாணக்கர்களுக்குப் பகுதி Iஇல் இடம்பெற்றுள்ள மலையாளம், இந்தி, பிரெஞ்சு ஆகிய பாடத்திட்டங்களுக்கான பாடங்களாகப் பாரதியார் பல்கலைக்கழகம் இணைப்புக் கல்லூரிகளுக்கு வடிவமைத்துக் கொடுத்துள்ள பாடத்தையே தொடர்ந்து நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் நடத்தப்பெற்று வருகின்ற முதுகலை தமிழ்இலக்கியம் பட்டத்திற்குப் பல்கலைக்கழக விதிமுறைகளைப் பின்பற்றி பாரதியார் பல்கலைக்கழகம் இணைப்புக் கல்லூரிகளுக்கு வடிவமைத்துக் கொடுத்துள்ள பாடத்திட்டம் கற்பிக்கப்படுகிறது. 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் முதுகலை தமிழ் இலக்கியம் பட்டப்படிப்பில் சேரும் மாணாக்கர்களுக்குத் தன்னாட்சி தகுதியின் கீழ் புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுப் பாடத்திட்டக்குழுவின் முன் வைக்கப்பட்டது.

2021-2022 ஆம் கல்வியாண்டில் சேரும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு பருவத்திற்கும் நான்கு முதன்மைப் பாடங்களும் ஒரு விருப்பப் பாடமும் நான்காம் பருவத்தில் 100 மதிப்பெண்களுக்கு ஆய்வேடு ஒப்படைத்தலும் வைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் முதல் பருவத்தில் இக்கால இலக்கியம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-இளம்பூரணர் உரை, கொங்குநாட்டியல், பக்தியிலக்கியம் ஆகிய தாள்களை முதன்மைப் பாடங்களாக வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இரண்டாம் பருவத்தில் அற இலக்கியம், தொல்காப்பியம் சொல்லதிகாரம்-சேனாவரையர் உரை, காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம் ஆகியனவும் மூன்றாம் பருவத்தில் சங்க இலக்கியம் - 1 எட்டுத் தொகை, தொல்காப்பியம் பொருளதிகாரம் முதல் ஐந்து இயல்கள் - இளம்பூரணர் உரை, தமிழ் இலக்கிய உரையாசிரியர்கள், இலக்கியத் திறனாய்வு ஆகியனவும் நான்காம் பருவத்தில் சங்க இலக்கியம் -2 பத்துப்பாட்டு, தொல்காப்பியம் பொருளதிகாரம் இறுதி நான்கு இயல்கள் - இளம்பூரணர் உரை, ஒப்பிலக்கியம், ஆய்வியல் நெறிமுறைகள் ஆகியனவும் முதன்மைப் பாடங்களாக வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் சமஸ்கிருதம், இந்தி, பரதநாட்டியம் ஆகியவற்றில் ஆறுமாதம் சான்றிதழ் வகுப்பு நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய பாடத்திட்டங்கள் அத்துறைசார்ந்த அறிஞர்களால் வடிவமைக்கப்பட்டுப் பாடத்திட்டக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

2021-2022 ஆம் கல்வியாண்டில் ஈராண்டுத் தமிழ் மற்றும் ஓராண்டுத் தமிழ் பயிலும் மாணாக்கர்களுக்கான தமிழ்ப் பாடத்திட்டத்தில் பகுதி I தமிழ் மற்றும் பகுதி IV சிறப்புத்தமிழ் ஆகியவற்றில் மாற்றம் செய்யப்பட்ட பாடப்பகுதிகளை (அலகு I மட்டும்) ஏற்றுக்கொண்ட பாடத்திட்டக்குழு 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் பட்டப் படிப்புகளில் சேரும் மாணாக்கர்களுக்கு நடத்துவதற்கு ஒப்புதல் அளித்தது.

பகுதி Iஇல் இடம்பெற்றுள்ள மலையாளம், இந்தி, பிரெஞ்சு ஆகிய பாடத்திட்டங்களுக்கான பாடங்களாகப் பாரதியார் பல்கலைக்கழகம் இணைப்புக் கல்லூரிகளுக்கு வடிவமைத்துக் கொடுத்துள்ள பாடத்தையே 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் பட்டப் படிப்புகளில் சேரும் மாணாக்கர்களுக்கு நடத்துவதற்குப் பாடத்திட்டக்குழு ஒப்புதல் அளித்தது.

2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் முதுகலை தமிழ் இலக்கியப் பட்டப்படிப்பில் சேருவோர்க்கான பாடத்திட்டங்களை நடத்துவதற்குப் பாடத்திட்டக்குழு ஒப்புதல் அளித்தது.

சமஸ்கிருதம், இந்தி, பரதநாட்டியம் ஆகிய சான்றிதழ் படிப்பிற்கான பாடத்திட்டங்களைப் பார்வையிட்ட பாடத்திட்டக்குழு 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் மேற்கண்ட சான்றிதழ் படிப்புகளில் சேரும் மாணாக்கர்களுக்கு அப்பாடங்களை நடத்துவதற்குப் ஒப்புதல் அளித்தது.

2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோருக்கான பகுதி I தமிழ், பகுதி IV சிறப்புத்தமிழ், பகுதி I மலையாளம், இந்தி, பிரெஞ்சு, சமஸ்கிருதம், இந்தி, பரதநாட்டியம் ஆகிய சான்றிதழ் படிப்புகளுக்கான பாடத்திட்டத்தைக் கல்விக்குழு மற்றும் பாடத்திட்ட நிலைக்குழு ஆகியவற்றின் முன் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றுக்கொள்ள பாடத்திட்டக்குழுத் தலைவருக்குப் பாடத்திட்டக்குழு ஒப்புதல் வழங்கியது.

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.